O.S.No. 135/2023 நாள் 24.02.2026 PW 1 – திரு. அமுதகண்ணன்

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை(பிரதிவாதிகள்தரப்பில்)

நான் இந்த வழக்கில் 14ம் வாதி என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்தை பிரித்து தர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தபசில் சொத்து எங்குள்ளது என்றால் கீழஅரசடியில் உள்ளது. தபசில் சொத்து ஆதியில் ஆண்டிச்சியம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ஆண்டிச்சியம்மாளின் கணவர் பெயர் வைரமுத்து என்றால் சரிதான். அவர்களுக்கு வாரிசுகள் உள்ளனரா என்றால் இல்லை. வைரமுத்து என்பவர் இறந்தபின்பு இரண்டாவதாக அனந்தப்பன் என்பவரை திருமணம் செய்தார் என்றால் சரிதான். அனந்தப்பனுக்கும், ஆண்டிச்சியம்மாளுக்கும் ஆத்திமுத்து என்ற ஒரே ஒரு ஆண் வாரிசு என்றால் சரிதான். ஆத்திமுத்து முதலாவதாக கரமேல் என்பவரை திருமணம் செய்தார் என்றால் சரிதான். கரமேல் இறந்த பிறகு தங்கம்மாள் என்பவரை இரண்டாவதாக ஆத்திமுத்து திருமணம் செய்தார் என்றால் சரிதான். ஆத்திமுத்து, கரமேலுக்கு பிறந்தவர்தான் 1ம் வாதி திருமணி என்றால் சரிதான். ஆத்திமுத்து, தங்கம்மாளுக்கு மாரியம்மாள், பெரியமுனியசாமி, முனியசாமி, கணேசன், முனியம்மாள், பெரியசாமி, மாயகிருஷ்ணன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மாரியம்மாளின் வாரிசுகள்தான் 2,3 வாதிகளான பேச்சிமுத்து, சுப்பம்மாள் என்றால் சரிதான். பெரியமுனியசாமியின் வாரிசுகள்தான் 4 முதல் 6 வாதிகள் என்றால் சரிதான். 7ம் வாதி முனியசாமிதான் எனது தகப்பனார் என்றால் சரிதான். என் அப்பா வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டார் என்றால்

சரிதான். அவருடைய வாரிசுகள்தான் 13 முதல் 16 வாதிகள் என்றால் சரிதான். கணேசன், மாயகிருஷ்ணன் இந்த வழக்கின் பிரதிவாதிகள் என்றால் சரிதான். பெரியசாமியின் வாரிசுகள்தான் 8 முதல் 11 வாதிகள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். தபசில் சொத்தை பொறுத்து 5/7 பாகம் கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மீதியுள்ள 2 பாகம் பிரதிவாதிகளுக்குரியது என்றால் சரிதான். தபசில் சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை செய்வதற்கு பிரதிவாதிகளிடம் கேட்டேனா என்றால் அவர்கள் வரவில்லை. வாதிகள் சார்பில் கேட்டதற்கு வருவாய்துறை ஆவணங்கள் சரிசெய்யப்பட்டால் பெரியவர்கள் முன்னிலையில் பிரித்துக்கொள்ளலாம் என்று பிரதிவாதிகள் சொன்னதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 2/7 பங்கு பாகத்தை ஒதுக்கிவிட்டு, மீதமுள்ள 5/7 பங்கு பாகத்தை வாதிகள் கோரியபடி பிரித்து கொள்ள உத்தரவிடுமாறுதான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.